DEPOSITION OF WITNESS

---

IN THE COURT OF SUBORDINATE JUDGE, DEVAKOTTAI.

| | | |
|---|---|---|
| Original Suit Case No. | : | |
| H.M.O.P. “ | : | |
| M.C.O.P. “ | : | 7/2021 |
| S.C. “ | : | |
| W.O.P. “ | : | |
| EP. “ | : | |
| Deposition of Witness for | : | P.W. 2 |
| | : | D.W. |
| | : | R.W. |
| | : | Court. |
| Name | : | அருண்குமார் (பில்லிங் மேலாளர்) |
| Father's Name | : | பால்ராஜ் |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 09.01.2025

**முதல் விசாரணை:**

நான் மானகிரி அப்பல்லோ மருத்துவமனையில் பில்லிங் மேலாளராக பணிபுரிந்து வருகிறறேன். நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததன் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் சொக்கலிங்கம் என்பவரின் மருத்துவ பில் சம்பந்தமாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். அவர் 06.08.2020 அன்று எங்கள் மருத்துவமனையில் எமர்ஜென்சி பிரிவில் அனுமதிக்கப்பட்டார். அவர் அன்றைய தினமே முதல் உதவி சிகிச்சை பெற்றுக்கொண்டு மருத்துவமனையிலிருந்து மேல்சிகிச்சைக்காக மதுரை மீனாட்சி மிசன் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தார் என்ற விவரம் எங்களுக்கு தெரியவந்தது. பில்களின் மொத்த எண்ணிக்கை(3) சிகிச்சைக்கான மொத்த தொகை ரூ.6,290/- ஆகும் அந்த பில்கள் ம.சா.ஆ15 ஆக நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படுகிறது.

**3ம் எதிர்மனுதாரரின் குறுக்கு விசாரணை:**

1. பொதுவாக மருத்துவமனையில் ஒரு நபர் சிகிச்சை பெற்று சிகிச்சை முடித்து செல்லும் போது அசல் பில்கள் கொடுப்பது வழக்கம் என்றால் சரிதான். அதுபோன்று சொக்கலிங்கத்திற்கும் அசல் பில்கள் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். என்னால் தாக்கல் செய்யப்பட்ட பில்கள் அசல் இல்லை என்றால் சரிதான், அவை சான்றிட்ட நகல்கள் ஆகும். அவர் என்ன என்ன மருத்துவம் பார்த்தார் என்ற விவரம் மருத்துவரை விசாரித்தால் தான் தெரியுமா என்றால் பில்களிலேயே அதற்கான விவரம் உள்ளது.

DEPOSITION OF WITNESS

---

IN THE COURT OF SUBORDINATE JUDGE, DEVAKOTTAI.

| | | |
|---|---|---|
| Original Suit Case No. | : | |
| H.M.O.P. “ | : | |
| M.C.O.P. “ | : | 7/2021 |
| S.C, “ | : | |
| O.P. “ | : | |
| EP. “ | : | |
| Deposition of Witness for | : | P.W.3 |
| | : | D.W. |
| | : | R.W. |
| | : | Court. |
| Name | : | கதிரவன் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 09.01.2025

**முதல் விசாரணை:**

நான் மதுரை மீனாட்சி மிசன் மருத்துவமனையில் முதுநிலை மேலாளராக (பில்லிங்) பணிபரிந்து வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததன் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் சொக்கலிங்கம் என்பவரின் மருத்துவ பில்கள் சம்பந்தமாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். அவர் 07.08.2020 முதல் 13.08.2020 வரை உள் நோயாளியாக மதுரை மீனாட்சி மிசன் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்ததற்கு அவருக்கு வழங்கப்பட்ட சிகிச்சைக்கான மொத்த பில்களுக்கான தொகை ரூ.3,67,075.50/-ஆகும். அந்த பில்கள் சம்பந்தப்பட்ட சான்றிட்ட நகல்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன். அந்த பில்கள் ம.சா.ஆ16ஆகும்.

**குறுக்கு விசாரணை:**

1. பொதுவாக மருத்துவமனையில் ஒரு நபர் சிகிச்சை பெற்று சிகிச்சை முடித்து செல்லும் போது அசல் பில்கள் கொடுப்பது வழக்கம் என்றால் சரிதான். அதுபோன்று சொக்கலிங்கத்திற்கும் அசல் பில்கள் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். என்னால் தாக்கல் செய்யப்பட்ட பில்கள்

அசல் இல்லை என்றால் சரிதான், அவை சான்றிட்ட நகல்கள் ஆகும். அவர் என்ன என்ன மருத்துவம் பார்த்தார் என்ற விவரம் மருத்துவரை விசாரித்தால் தான் தெரியுமா என்றால் பில்களிலேயே அதற்கான விவரம் உள்ளது. சிகிச்சை பெற்ற நபர் காப்பீடு திட்டத்தின் மூலம் சிகிச்சை எதுவும் பெற்றுள்ளாரா என்றால் அவர் ரொக்கமாகத்தான் பணம் செலுத்தியுள்ளார்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்)- திருமதி.P.கலை நிலா, M.L.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.